கூட்டுறவுச்சங்கங்களின் விருதுநகர் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையம்
விருதுநகர் மாவட்டம்

முகவரி : கூட்டுறவுச்சங்கங்களின் இணைப்பதிவாளர் அலுவலகம்
சி – 1 –3 பிளாக், முதல் தளம்,
மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகம்
குமாரசாமி ராஜாநகர்,
விருதுநகர்
இணையதள முகவரி : http://www.vnrdrb.net

விளம்பர எண். 02/2019 நாள் –09.08.2019

விருதுநகர் மாவட்டத்தில் கூட்டுறவுச்சங்கங்களின் பதிவாளர் கட்டுப்பாட்டில் செயல்படும் கீழ்க்காணும் வகை கூட்டுறவு நிறுவனங்களில் காலியாக உள்ள உதவியாளர்/எழுத்தர் பணியிடங்களை நேரடி நியமனம் மூலம் நிரப்புவதற்காக இந்திய குடியுரிமையுடைய கீழ்க்காணும் தகுதிபெற்ற ஆண் /பெண் விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் "http//www.vnrdrb.net" என்ற இணையதள முகவரியில் மட்டுமே (only through Online) 06.09.2019 பிற்பகல் 5.45 மணிவரை வரவேற்கப்படுகின்றன.

| வ எ | சங்கத்தின்வகை | காலிப்பணியிடங்கள் பதவி மற்றும் எண்ணிக்கை | பணியிடத்திற்கான சம்பள விகிதம் (தற்போதுள்ளபடி) குறைந்தபட்சம் / அதிகபட்சம் |
|---|---|---|---|
| 1 | நகர கூட்டுறவு வங்கி | 30 | 11900-700/8-17500-850/4 - 20900-1050/11-32450/- (1+23 Stages) |
| 2 | தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன்சங்கம் | 11 | A class -16000-54000/- |
| | | 5 | B class -12200-33580/- |
| | | 8 | C class -10050-29940/- |
| | | 2 | 4680/-130/09-5850-160/10-7450-185/16-10410 |
| 3 | பிரதம கூட்டுறவு விவசாய (ம) ஊரக வளர்ச்சி வங்கி | 1 | 10000-43000/- |
| 4 | நகர கூட்டுறவு கடன் சங்கம் | 1 | 15000-47600/- |
| 5 | பிரதம கூட்டுறவு பண்டகசாலை | 1 | 3800-14000/- |
| | | 1 | 3600-9000 |
| 6 | கூட்டுறவு விற்பனை சங்கம் | 1 | 4000-14000/- |

| வ எ | சங்கத்தின்வகை | காலிப்பணியிடங்கள் பதவி மற்றும் எண்ணிக்கை | பணியிடத்திற்கான சம்பள விகிதம் (தற்போதுள்ளபடி) குறைந்தபட்சம் / அதிகபட்சம் |
|---|---|---|---|
| 7 | மாவட்ட கூட்டுறவு ஒன்றியம் | 1 | 5200/- - 20200/- Grade Pay - .2400/- |
| 8 | பணியாளர் கூட்டுறவு சிக்கன நாணய சங்கம் | 1 | 15000-47600 |
| 9 | நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை | 1 | 5500– 14000 |
| | மொத்தம் | 64 | |

**கூட்டுறவு நிறுவனங்கள் வாரியாக காலிப்பணியிடங்களின் விவரம்**

**கூட்டுறவு நகர வங்கி**

| வ எ | கூட்டுறவு நகர வங்கியின் பெயர் | வகைப்பாடு | காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | Q.805. சிவகாசி கூட்டுறவு நகர வங்கி | 2 | 4 |
| 2 | A.142/1337. திருவில்லிபுத்தூர் கூட்டுறவு நகர வங்கி | 2 | 5 |
| 3 | ஏ.394.விருதுநகர் கூட்டுறவு நகர வங்கி | 3 | 8 |
| 4 | ஓ.386, பூபதிராஜீ கூட்டுறவு நாணய வங்கி | 3 | 7 |
| 5 | A.205/1524. இராஜபாளையம் கூட்டுறவு நகர வங்கி | 3 | 6 |
| | | மொத்தம் | 30 |

**தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம்**

| வ எ | தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் பெயர் | வகுப்பு | காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | க்யூ.578 துலுக்கப்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | வகுப்பு A | 1 |
| 2 | எஸ்.ப்பி.எஸ்.ப்பி.எல்.72.அருணாசலபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | வகுப்பு A | 1 |
| 3 | ஆர்.67.வள்ளியூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | வகுப்பு A | 1 |
| 4 | க்யூ.874.ம.ரெட்டியபட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | வகுப்பு A | 1 |
| 5 | க்யூ.427. மம்சாபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | வகுப்பு A | 1 |

| வ எ | தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் பெயர் | வகுப்பு | காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 6 | SpSpl.35. தொம்பக்குளம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | வகுப்பு A | 1 |
| 7 | Q.583. கல்லமநாயக்கன்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | வகுப்பு A | 1 |
| 8 | RA.385. சதானந்தபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | வகுப்பு A | 1 |
| 9 | Q.872. திருத்தங்கல் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | வகுப்பு A | 2 |
| 10 | 474, தாயில்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | வகுப்பு A | 1 |
| 11 | SpSpl.76. செவல்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | வகுப்பு B | 1 |
| 12 | 590, எஸ்.சுப்பிரமணியபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | வகுப்பு B | 1 |
| 13 | Q.888. கே.கோபாலபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம். | வகுப்பு B | 1 |
| 14 | ஓ.261. கொத்தனேரி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | வகுப்பு B | 1 |
| 15 | ஆர்.102.மருதநத்தம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | வகுப்பு B | 1 |
| 16 | க்யூ.961. ஜமீன்நத்தம்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | வகுப்பு C | 1 |
| 17 | SpSpl.58. மாரனேரிதொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | வகுப்பு C | 1 |
| 18 | SpSpl.74. முத்துச்சாமிபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | வகுப்பு C | 1 |
| 19 | SpSpl.59. நள்ளி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | வகுப்பு C | 1 |
| 20 | Q.126. புலிப்பாறைப்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | வகுப்பு C | 1 |
| 21 | SpSpl.43. சோழபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | வகுப்பு C | 1 |
| 22 | RA.423. கொம்பங்கிபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | வகுப்பு C | 1 |
| 23 | எஸ்பி.எஸ்பிஎல்.108. வலுக்கலொட்டி | வகுப்பு C | 1 |
| 24 | வி.கரிசல் குளம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கட ன்சங்கம் | – | 1 |
| 25 | எஸ்பி.எஸ்பிஎல்.151. பட்டமங்கலம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | – | 1 |
| | | மொத்தம் | 26 |

**இதர கூட்டுறவு நிறுவனங்கள்**

| வ எ | கூட்டுறவு நிறுவனத்தின் பெயர் | காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | Q.848. சிவகாசி கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி | 1 |
| 2 | Q.785. வத்ராப் நகர கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| 3 | A.1579. சிவகாசி பிரதம கூட்டுறவு பண்டகசாலை | 1 |
| 4 | க்யூ.309.வீரசோழன் கூட்டுறவு பண்டகசாலை | 1 |
| 5 | க்யூ.948,சிவகாசி வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கம் | 1 |
| 6 | ஆர்.ஏ.418. இராஜபாளையம் சரக உதவி பெறும் தனியார் பள்ளி ஆசிரியர்கள் கூட்டுறவு சிக்கன நாணய சங்கம் | 1 |
| 7 | விருதுநகர் நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை | 1 |
| 8 | விருதுநகர் மாவட்ட கூட்டுறவு ஒன்றியம் | 1 |
| | மொத்தம் | 8 |

ஒட்டுமொத்த 64 காலிப்பணியிடங்களுக்கான வகுப்புவாரி ஒதுக்கீடு

| | | |
|---|---|---|
| பொதுப்பிரிவு | : | 19 |
| பிற்படுத்தப்பட்டோர் | : | 17 |
| மிகவும் பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர் | : | 13 |
| பிற்படுத்தப்பட்டோர் (முஸ்லீம்) | : | 2 |
| ஆதிதிராவிடர் | : | 10 |
| ஆதிதிராவிடர் (அருந்ததியர்) | : | 2 |
| பழங்குடியினர் | : | 1 |

அ) மேற்படி சம்பள விகிதம் மற்றும் இதர படிகள் மேற்குறிப்பிட்ட கூட்டுறவு நிறுவனங்களின் பணிநிலை குறித்த சிறப்புத் துணைவிதிகளுக்குட்பட்டு அமையும்.

ஆ) தேர்வு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் அவர்களுக்கு ஒதுக்கப்படும் சம்பந்தப்பட்ட கூட்டுறவு நிறுவனங்களின் துணைவிதிகளுக்குட்பட்டு பணியாற்ற வேண்டும்.

இ). தேர்வில் கலந்துகொள்ளும்போது கடைப்பிடிக்கப்பட வேண்டிய விதிமுறைகள் குறித்த விவரங்கள் தேர்வு நுழைவுச்சீட்டில் தெரிவிக்கப்படும்.

**1). முக்கிய நாட்களும் நேரமும் :**

| | | |
|---|---|---|
| 1). | பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் பதிவேற்றம் செய்யப்பட வேண்டிய கடைசி நாள் | 06.09.2019 பிற்பகல் 5.45 மணிவரை |
| 2). | எழுத்துத்தேர்வு நடைபெறும் நாள் | 20.10.2019 பிற்பகல் 2.00 முதல் 5.00 மணிவரை |

**2) தகுதிகள்**

**அ) வயது**

- விண்ணப்பதாரர் 18 வயது பூர்த்தி அடைந்தவராக இருக்க வேண்டும் (அதாவது 01.01.2001அன்றோ அதற்கு முன்னரோ பிறந்தவராக இருக்க வேண்டும்.
- விண்ணப்பதாரர்கள் 01.01.2019 அன்று கீழ்க்கண்ட வயதினை பூர்த்தி செய்தவராக இருக்கக் கூடாது.

| | | | |
|---|---|---|---|
| 1 | ஆதிதிராவிடர், அருந்ததியர், பழங்குடியினர், மிகவும் பிற்படுத் தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர், பிற்படுத்தப்பட்டவகுப்பினர், சார்ந்த முன்னாள் இராணுவத்தினர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் | : | வயது வரம்பு இல்லை |
| 2 | பிற வகுப்பினர் (OC) | : | 30 வயதுக்கு மிகாமல் |
| 3 | அனைத்து இனத்தைச் சார்ந்த ஆதரவற்ற விதவைகள் | : | வயது வரம்பு இல்லை |
| 4 | பிற வகுப்பினர் (OC) சார்ந்த முன்னாள் இராணுவத்தினர் | : | 48 வயதுக்கு மிகாமல் |
| 5 | பிற வகுப்பினர் (OC) சார்ந்த மாற்று திறனாளிகள் | : | 40 வயதுக்கு மிகாமல் |

**ஆ) கல்வித்தகுதி – ஏதேனும் ஒரு பட்டப்படிப்பு (Any Degree) ( 10 + 2 + 3 ) மற்றும் கூட்டுறவுப் பயிற்சி**

- பல்கலைக் கழகங்களால் வழங்கப்படும் பட்டப் படிப்பிற்கு பதிலாக பதினைந்து ஆண்டுகள் இராணுவத்தில் பணிபுரிந்தவர்களுக்கு இராணுவத்தால் வழங்கப்படும் பட்டப்படிப்புச் சான்றிதழ் பெற்றுள்ள முன்னாள் இராணுவத்தினர்களும்

விண்ணப்பிக்கலாம். ஆனால் அவர்கள் பள்ளி இறுதித் தேர்விலும் (SSLC) மேல்நிலைக் கல்வியிலும் (HSC) தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

- கூட்டுறவு பயிற்சி பெற்றவர்கள் மட்டுமே மேற்படி உதவியாளர்/எழுத்தர் நியமனத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும். கூட்டுறவு பயிற்சி குறித்த விரிவான விவரங்கள் அடங்கிய பதிவாளர் அவர்களின் சுற்றறிக்கை எண். 29 / 2013 நாள் – 18.7.2013 மாவட்ட ஆள்சேர்ப்பு நிலைய இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

- விண்ணப்பதாரர்கள் பள்ளி இறுதி வகுப்பு அல்லது மேல்நிலை படிப்பு அல்லது பட்டப் படிப்பின்போது தமிழ்மொழியை ஒரு பாடமாக படித்துத் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

- கணினி பயன்பாட்டில் அடிப்படை அறிவு பெற்றிருத்தல் வேண்டும்.

**இ) பொது**

- விண்ணப்பதாரர்கள் பிற மாநிலத்தவர்களாக இருக்கும் பட்சத்தில் அவர்கள் எந்தப் பிரிவைச் சார்ந்தவர்களாக இருப்பினும் பிற வகுப்பினராகவே (OC) கருதப்படுவர்.

- ”ஆதரவற்ற விதவை ” என்பது அனைத்து வழியிலிருந்தும் பெறும் மொத்த மாத வருமானம் ரூ 4000/–க்கும் (ரூபாய் நான்காயிரம் மட்டும்) குறைவாகப் பெறுகின்ற ஒரு விதவையைக் குறிப்பதாகும். இவ்வருமானம், குடும்ப ஓய்வூதியம் அல்லது தொழிற்கல்வி பெற்றவர்களின் சுயதொழில் மூலம் ஈட்டும் வருமானம் உள்ளிட்ட மற்ற வருமானங்கள் ஆகியவற்றையும் உள்ளடக்கியதாகும். இத்தகைய விண்ணப்பதாரர்கள் உரிய **வருவாய் கோட்ட அலுவலர் அல்லது உதவி ஆட்சியர் அல்லது சார் ஆட்சியரிடமிருந்து** நிர்ணயிக்கப்பட்ட படிவத்தில் சான்றிதழைப் பெற்று சமர்ப்பிக்க வேண்டும். விவாகரத்து பெற்றவர், கணவரால் கைவிடப்பட்டவர், ஆதரவற்ற விதவையாக கருதப்படமாட்டார். மறுமணம் புரிந்தவர் ஆதரவற்ற விதவையாகக் கருதப்படமாட்டார்

**3) விண்ணப்பக் கட்டணம்**

அ) **விண்ணப்பப் பதிவு மற்றும் எழுத்துத் தேர்வுக்கான கட்டணம் ரூ 250/– ஆகும்**

ஆ) **விண்ணப்பக்கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிப்பு**

- ஆதிதிராவிடர், பழங்குடியினர், அனைத்து பிரிவையும் சார்ந்த மாற்றுத் திறனாளிகள், அனைத்து பிரிவையும் சார்ந்த ஆதரவற்ற விதவைகள ஆகியோருக்கு இக்கட்டணம் செலுத்துவதிலிருந்துவிலக்களிக்கப்படுகிறது.

- விண்ணப்பக் கட்டணம் செலுத்த விலக்களிக்கப்பட்டுள்ள மாற்றுத்திறனாளிகள் **மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலரிடமிருந்து** சான்றிதழும் மருத்துவச் சான்றிதழும் பெற்றிருக்க வேண்டும். ஆதரவற்ற விதவைகள் **வருவாய் கோட்ட அலுவலர் அல்லது உதவி ஆட்சியர் அல்லது சார் ஆட்சியரிடமிருந்து** சான்று பெற்றிருக்க வேண்டும்.

இ) **விண்ணப்பக்கட்டணம் செலுத்தும் முறை**

- விண்ணப்பப்பிதற்கு முன் விண்ணப்பக்கட்டணத்தினை கீழ்க்காணும் இரண்டு முறைகளில் ஏதேனும் ஒரு முறை மூலம் கட்டணம் செலுத்த வேண்டும்

1. மேற்படி கட்டணம், விருதுநகர் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் தலைமையகம் அல்லது கிளைகளில் நேரடியாக செலுத்தப்பட்டு, அவ்வாறு செலுத்தப்பட்ட விண்ணப்பக்கட்டண இரசீதில் (Candidate's copy of the chalan ) உள்ள Journal ID என்ற எண்ணை விண்ணப்பதாரர், தமது விண்ணப்பத்தில் அதற்கென்று ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் குறிப்பிட்டு விண்ணப்பக் கட்டணம் செலுத்திய இரசீதை (Candidate's copy of the pay -in - slip) Scan செய்து upload செய்ய வேண்டும்.

2. தேர்வுக் கட்டணத்தை Online மூலம் State Bank of India இணையதளத்தில் உள்ள “SBI Collect “ என்ற சேவையைப் பயன்படுத்தியும் செலுத்தலாம். 'SBI Collect ' என்ற சேவையைப் பயன்படுத்தி விண்ணப்பக் கட்டணம் செலுத்துவதற்கான வசதி (Link to the 'SBI Collect ' service in the State Bank of India Online paym ent portal) விருதுநகர் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலைய இணையதளத்திலும் கொடுக்கப்பட்டிருக்கும். Online மூலம் மேற்குறிப்பிட்டவாறு விண்ணப்பக் கட்டணத்தைத் செலுத்தி முடித்த பின்னர் திரையில் தோன்றும் இரசீதினை பிரிண்ட் எடுத்துக்கொள்வதுடன் அங்கே திரையில் தோன்றும் DUA .. .. .. .. .. .. என்று தொடங்கும் எண்ணை (SBI Collect Reference Number)குறித்து வைத்துக் கொண்டு அந்த எண்ணை விண்ணப்பத்தில் அதற்கென்று ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் குறிப்பிட வேண்டும்.

ஈ) **விண்ணப்பக்கட்டணம் செலுத்துவதில் உள்ள நிபந்தனைகள்**

- இணையவழி கட்டணம் செலுத்தும்போது ஏற்படும் இடர்பாடுகளுக்கும் தோல்விகளுக்கும் விருதுநகர் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையம் பொறுப்பாகாது

- மேற்கண்ட நடைமுறைகளைப் பின்பற்றி Online மூலம் பணம் செலுத்தும் விண்ணப்பதாரர்கள் DUA .. .. .. .. .. .. .. எண்ணை பிறரிடம் பகிரக்கூடாது. அதேபோல் மத்திய கூட்டுறவு வங்கியின் Jounal ID-ஐ பிறரிடம் பகிரக்கூடாது. ஒரே DUA எண் / Jounal ID எண் ஒன்றுக்கு மேற்பட்டவிண்ணப்பங்களிலிருந்தால் அந்த விண்ணப்பங்கள் அனைத்தும் நிராகரிக்கப்படும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை **”http//www.vnrdrb.net ”** என்ற இணையதளம் மூலம் **06.09.2019** மாலை **5.45** மணி வரை பதிவேற்றம் செய்யலாம்.

- கட்டணம் செலுத்தும் முறையை எந்த நேரத்திலும் மாற்றியமைக்கும் உரிமை விருதுநகர் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்திற்கு உண்டு.

- ஒருமுறை செலுத்தப்பட்ட விண்ணப்பக் கட்டணம் எக்காரணத்தைக்கொண்டும் திருப்பித்தரப்படமாட்டாது.

**4) விண்ணப்பிக்கும் முறை**

- அறிவிக்கப்பட்டுள்ள காலிப்பணியிடங்களுக்கான விண்ணப்பப்படிவம் "http://www.vnrdrb.net "என்ற இணையதளம் மூலம் மட்டுமே பதிவேற்றம் செய்யப்பட வேண்டும். விண்ணப்பதாரர்கள் இணையதளம் மூலம் பதிவேற்றம் செய்யும் முன் கீழ்க்கண்ட வற்றை உறுதி செய்துகொள்ள வேண்டும்.

- விண்ணப்பப் படிவங்கள் இணையதளம் மூலம் முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும்.

- விண்ணப்பப் படிவங்களுடன் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவைகளும் அவற்றிற்கென ஒதுக்கப்பட்ட இடங்களில் ஸ்கேன் செய்யப்பட்டு பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்.

    1. விண்ணப்பதாரரின் புகைப்படம் – 50 KB அளவிற்கு மிகாமல் ( jpeg or jpg format)
    2. விண்ணப்பதாரரின் கையெழுத்து – 50 KB அளவிற்கு மிகாமல் (jpeg or jpg format)
    3. விண்ணப்பதராரின் சாதிச் சான்றிதழ் – 200 KB அளவிற்கு மிகாமல் (pdf file)
    4. மாற்றுத்திறனாளிச் சான்றிதழ் – 200 KB அளவிற்கு மிகாமல் (pdf file)
    5. ஆதரவற்ற விதவைச் சான்றிதழ் – 200 KB அளவிற்கு மிகாமல் (pdf file)
    6. கூட்டுறவு பட்டயப் பயிற்சி சான்றிதழ் – 200 KB அளவிற்கு மிகாமல் (pdf file)
    7. பட்டப்படிப்பு சான்றிதழ் – 200 KB அளவிற்கு மிகாமல் (pdf file)
    8. மத்திய கூட்டுறவு வங்கி மூலம் செலுத்தப்பட்ட விண்ணப்பக் கட்டண இரசீது (Candidate"s copy of the pay- in - slip ) – 100 KB அளவிற்கு மிகாமல் (jpeg or jpg format )

- மேற்குறிப்பிட்ட ஸ்கேன் செய்யப்பட்ட ஆவணங்கள் பதிவேற்றம் செய்யப்படாமல் பெறப்படும்விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

- விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்யும்போது விண்ணப்பதாரர் தவறான தகவல்களை அளித்தால் அவ்விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

## 5) எழுத்துத் தேர்வு

- மேற்கண்ட பதவிக்கு விண்ணப்பிக்கும் விண்ணபதாரர்களின் விண்ணப்பங்கள் பரிசீரிக்கப்பட்டு தகுதி உள்ளவர்கள் மட்டுமே எழுத்துத் தேர்வுக்கு அழைக்கப்படுவார்கள். எழுத்துத் தேர்வில் கலந்துகொள்ளத் தகுதி பெற்ற நபர்களின் பட்டியல் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலைய இணையதளத்தில் ( “http//www.vnrdrb.net “ ) வெளியிடப்படும்.

- எழுத்துத்தேர்வு மாவட்டத்தின் குறிப்பிட்ட இடங்களில் நடைபெறும். எழுத்துத் தேர்வு எந்த இடத்தில் நடைபெறும் என்பது எழுத்துத் தேர்வுக்கான நுழைவுச்சீட்டில் குறிப்பிடப்படும். எழுத்துத் தேர்வு நடைபெறுவது தொடர்பான விவரங்கள் மின்னஞ்சல் (e-mail) மூலம் தகுதி பெற்ற விண்ணப்பதாரர்களுக்கு அனுப்பி வைக்கப்படும். எழுத்துத் தேர்வுக்கான நுழைவுச் சீட்டினை தேர்வு நாளிலிருந்து ஒரு வார காலத்திற்கு முன் விருதுநகர் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலைய இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டும். நுழைவுச் சீட்டுடன் வராத விண்ணபதாரர்கள் எழுத்துத் தேர்வில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள்.

- எழுத்துத்தேர்வு பட்டப்படிப்பு நிலையிலான தரத்துடனும், பொது அறிவு, பொதுத்தமிழ், அடிப்படைக் கணக்கியல், கூட்டுறவுச் சட்டம் மற்றும் வங்கியியல் போன்ற பாடங்களை உள்ளடக்கிய தாகவும் இருக்கும். எழுத்துத் தேர்வு கொள்குறி வகையில் (Objective type) 200 வினாக்களுடன், 170 மதிப்பெண்களுக்கானதாகவும் தேர்வுக்கான கால அளவு 180 நிமிடங்கள் கொண்டதாகவும் இருக்கும். வினாத்தாள் ஆங்கிலம் மற்றும் தமிழில் அச்சடிக்கப்பட்டிருக்கும்.

- மேற்கண்ட எழுத்துத் தேர்வுக்குரிய பாடத்திட்டங்கள் (Syllabus) விருதுநகர் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலைய இணைய தளத்தில் வெளியிடப்படும்.

- எழுத்துத் தேர்வு முடிவு பெற்ற பின் எழுத்துத்தேர்வுக்கான வினாவிடைகள் (Key answers) விருதுநகர் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலைய இணையதளத்தில் வெளியிடப்படும். வெளியிடப்பட்ட வினா விடைகள் (Key answers) தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை இருந்தால் வெளியிடப்பட்ட தேதியிலிருந்து மூன்று தினங்களுக்குள் விருதுநகர் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்திற்கு எழுத்து பூர்வமாக அல்லது இமெயில் மூலமாகத் தெரிவிக்க வேணடும். விருதுநகர் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையக் கூட்டத்தில் அது பரிசீலிக்கப்பட்டு உரிய முடிவுகள் எடுக்கப்படும்.

## 6) நேர்முகத்தேர்வு

- எழுத்துத் தேர்வில் வெற்றி பெற்ற விண்ணப்பதாரர்கள் விருதுநகர் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்தால் நடத்தப்படும் நேர்முகத் தேர்வில் கட்டாயம் கலந்துகொள்ள வேண்டும். விண்ணப்பதாரர்கள் எழுத்துத் தேர்வில் பெற்ற

மதிபெண்கள் அடிப்படையிலும், இட ஒதுக்கீடு மற்றும் இனச்சுழற்சி அடிப்படையிலும் நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படுவார்கள்.

- நேர்முகத் தேர்வில் கலந்துகொள்ளத் தகுதி பெற்ற நபர்களின் பெயர்ப் பட்டியல் விருதுநகர் மாவட்ட ஆள் சேர்ப்பு நிலையத்தின் இணையதளம் வழியாக வெளியிடப்படும்.

- நேர்முகத் தேர்வு நடைபெறுவது தொடர்பான விவரங்கள் மின்னஞ்சல் மூலம் தகுதிபெற்ற விண்ணப்பதாரர்களுககு அனுப்பி வைக்கப்படும். நேர்முகத்தேர்வு நடைபெறும் இடம், நாள், நேரம் ஆகிய விவரங்கள் அடங்கிய நேர்முகத் தேர்விற்கான அழைப்புக் கடிதங்களை, தகுதி பெற்ற விண்ணப்பதாரர்கள் இணையதளம் மூலம் பதிவிறக்கம் செய்துகொள்ள வேண்டும். அழைப்புக் கடிதத்துடன் வராத விண்ணப்பதாரர்கள் நேர்முகத்தேர்வில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள்.

- நேர்முகத் தேர்வில் கலந்துகொள்ளவரும் விண்ணப்பதாரர்களிடம், அவர்கள் எந்த வகை கூட்டுறவு நிறுவனத்திற்கு எந்த வரிசையில் ஒதுக்கீடு செய்யப்பட விரும்புகிறார்கள் என்ற முன்னுரிமை விருப்பம் (option) பெறப்படும். நேர்முகத் தேர்வு முடிவடைந்த பின்னர், தகுதி பெற்ற விண்ணப்பதாரர்களை கூட்டுறவு நிறுவனங்களுக்கு ஒதுக்கீடு செய்யும்போது விண்ணப்பதாரர்கள்தெரிவித்த முன்னுரிமை கவனத்தில் கொள்ளப்படும்.

- எழுத்துத் தேர்வுக்கான மதிப்பெண் மற்றும் நேர்முக தேர்வுக்கான மதிப்பெண் முறையே 85 : 15 என்ற விகிதத்தில் இருக்கும்.

## 7) தெரிவு செய்யப்படும் முறை

- விண்ணப்பதாரர்கள் எழுத்துத் தேர்விலும் நேர்முகத் தேர்விலும் பெற்ற ஒட்டுமொத்த மதிப்பெண்கள் அடிப்படையில் தரவரிசைப் பட்டியல் தயாரிக்கப்பட்டு அரசாணைப்படியான இட ஒதுக்கீடு இனச் சுழற்சி முறை, அவர்கள் தெரிவித்த முன்னுரிமை விருப்ப கூட்டுறவு நிறுவனம் ஆகியவற்றின அடிப்படையில் அதற்குரிய கூட்டுறவு நிறுவனத்திற்கு கணினி மூலம் பணியிடத்தற்கு ஒதுக்கீடு செய்யப்படுவார்கள்.

- மேற்குறிப்பிட்ட முறைப்படி விண்ணப்பதாரர்களை சங்கங்களுக்கு ஒதுக்கீடு செய்யும்போது அதிக மொத்த மதிப்பெண் பெற்றவர்கள் இனச்சுழற்சியைப் பின்பற்றி அவர்கள் விருப்பம் தெரிவித்திருந்த கூட்டுறவு நிறுவனத்திற்கு ஒதுக்கீடு செய்யப்படுவர். குறைவான மதிப்பெண் பெற்றவர்களுக்கு இனச்சுழற்சி அடிப்படையில் அவர்கள் விரும்பிய கூட்டுறவு நிறுவனத்துக்கு ஒதுக்கீடு கிடைக்காமல் போகலாம். அத்தகைய நேர்வில் அந்தச் சமயத்தில் அவர்களது இனச்சுழற்சிக்கு எந்த கூட்டுறவு நிறுவனத்தில் காலிப் பணியிடம் இருக்கிறதோ அந்த கூட்டுறவு நிறுவனத்திற்கு அவர் ஒதுக்கீடு செய்யப்படுவார்.

- விண்ணப்பதாரர் ஒரு கூட்டுறவு நிறுவனத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பின்னர் அவரை வேறொரு கூட்டுறவு நிறுவனத்திற்கு மாற்ற இயலாது. அவ்வாறு வேறொரு கூட்டுறவு நிறுவனத்திற்கு மாற்றம் செய்யக் கோரி வரும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படமாட்டாது.

- ஆதிதிராவிடர், அருந்ததியர், பழங்குடியினர், மிகவும் பிறப்டுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (முஸ்லீம்) ஆதரவற்ற விதவைகள், மாற்றுத் திறனாளிகள் மற்றும் ராணுவத்தினர் ஆகியோருக்கு ஒதுக்கப்பட்ட இடங்கள், விண்ணப்பதாரர்கள்தங்கள் விண்ணப்பங்களில் கொடுக்கும் வயது, கல்வித்தகுதி கூட்டுறவுப் பயிற்சித் தகுதி, சமூகப் பிரிவு, சிறப்புத் தகுதிகள் மற்றும் பிற தகுதிகள் அனைத்தையும் சரிபார்த்த பின்னர், அவற்றைப் பெறத் தகுதி உடைய விணண்பப்தாரர்களுக்கு வழங்கப்படும்.

- விருதுநகர் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்தால் தேர்வு செய்யப்படும் நபர்களுக்குத் தெரிவு மற்றும் கூட்டுறவு நிறுவனத்திற்கு ஒதுக்கீடு ஆணை ( Section and allotment order) விருதுநகர் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்தால் வழங்கப்படும். அவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட கூட்டுறவு நிறுவனத்தின் தகுதி வாய்ந்த அலுவலரால் பணியமர்வு ஆணை( Appointment order) வழங்கப்படும்.

- முன்னாள் இராணுவத்தின் வாரிசுதாரர்களுக்கு முன்னாள் இராணுவத்தினருக்கான இட ஒதுக்கீடு முறை பொருந்தாது.

- தெரிவு செய்யப்படும் மாற்றுத் திறனாளிகள், தங்களது குறைபாடு, தாங்கள் தெரிவு செய்யப்படும் பதவிகளுக்குரிய பொறுப்புகளை முழுத்திறனுடன் நிறைவேற்றுவதற்குத் தடையாக இருக்காது என்பதற்கான சான்றிதழை மருத்துவக் குழுவிடம் பெற்று சமர்ப்பிக்க வேண்டும்.

**8) இதர நிபந்தனைகள்**

- நேர்முகத் தேர்வில் கலந்துகொண்டு நிர்ணயிக்கப்பட்ட அனைத்து தகுதிகளையும் பூர்த்தி செய்துள்ளார் என விருதுநகர் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்தால் தெரிவு செய்யப்பட்ட ஒரு விண்ணப்பதாரர் அப்பணிக்கென நிர்ணயிக்கப்பட்ட தகுதிகள் அனைத்தையும் முழுமையாகப் பெற்றிருக்கவில்லையென பின்னர் கண்டுநிடிக்கப்பட்டால் அவரது தேர்வு விருதுநகர் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்தால் ரத்து செய்யப்படும்.

- நேர்முகத்தேர்வில் கலந்துகொள்ளும் விண்ணப்பதாரர்களுக்கு அவ்வாறு நேர்முகத் தேர்வில் கலந்துகொள்ள அழைப்புக் கடிதம் அனுப்பப்பட்டதை மட்டுமே காரணமாக வைத்து பணி நியமனம் கோர உரிமை கிடையாது.

- மேற்படி பணியிடங்களுக்கான தேர்வு குறித்து ஏதேனும் முறையீடு செய்வதாயின் இறுதித் தேர்வு முடிவு வெளியிடப்பட்ட **90** நாட்களுக்குள்

விருதுநகர் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத் தலைவரிடம் உரிய காரணங்களுடன் மேல்முறையீடு செய்ய வேண்டும். அதற்குப் பின் பெறப்படும் முறையீடுகள் ஏற்கப்படமாட்டாது.

- மேலே குறிப்பிடப்பட்டுள்ள காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை கடைசி நேர மாறுதலுக்குட்பட்டது.

- காரணம் எதுவும் தெரிவிக்காமல் இந்த அறிவிக்கையை இரத்து செய்வதற்கு / திரும்பப் பெறுவதற்கு / திருத்துவதற்கு / கெடு தேதியை நீட்டிப்பதற்கு விருதுநகர் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்திற்கு உரிமையுண்டு.

- விண்ணப்பதாரர்கள் அவர்களது சொந்த நலன் கருதி அவர்களது விண்ணப்பத்தைச் சமர்ப்பிப்பதற்கு முன்பாக விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரைகளை கவனமாகப் படித்து தேர்வு செய்யப்படுவதற்குரிய நிபந்தனைகளைப் புரிந்துகொள்ள வேண்டும்.

- விண்ணப்பதாரர்கள் தேர்வுக்கு விண்ணப்பிப்பதற்காக கொடுக்கப்பட்டுள்ள கடைசி நாள் வரை காத்திருக்காமல் அதற்கு முன்னரே போதிய கால அவகாசத்தில் விண்ணப்பிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். ஏனெனில் கடைசி நாளில் அதிகபடியான விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்க நேரும்போது, விண்ணப்பம் சமர்ப்பிப்பதில் தாமதமோ அல்லது தொழில்நுட்பச் சிக்கல்களோ எழ வாய்ப்புள்ளது.மேற்கூறிய தொழில்நுட்பக் காரணங்களால் அல்லது வேறு காரணங்களால், விண்ணப்பதாரர்கள் தங்களது விண்ணப்பங்களைக் கடைசிக் கட்ட நாட்களில் சமர்ப்பிக்க இயலாது போனால் அதற்கு விருதுநகர் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையம் பொறுப்பாகாது.

- விண்ணப்பத்தினைச் சமர்ப்பிப்பதற்கான கடைசி நாள் மற்றும் நேரத்திற்குப் பிறகு ஆன்லைன் மூலம் விண்ணப்பம் செய்வதற்கான வசதி உடனடியாக நிறுத்தப்படும்.

- விண்ணப்பக் கட்டணம் செலுத்தியது தொடர்பான பிரச்சனை குறித்து ஏதேனும் முறையீடு செய்வதாயின் அப்பிரச்சனை ஏற்பட்ட **3** நாட்களுக்குள் விருதுநகர் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்திடம் உரிய காரணங்களுடன் முறையீடு செய்ய வேண்டும். அதற்குப் பின் பெறப்படும் முறையீடுகள் ஏற்கப்படமாட்டாது.

- கூடுதல் விவரங்கள் அல்லது சந்தேகங்களுக்கு 04562 252680 ல் உள்ள உதவி மையத்தையோ அல்லது vnrdrb2019@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரியையோ தொடர்பு கொள்ளலாம்

இணைப்பதிவாளர் /தலைவர்
கூட்டுறவுச் சங்கங்களுக்கான
விருதுநகர் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையம்

கூட்டுறவுச்சங்கங்களின் விருதுநகர் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையம்

விருதுநகர் மாவட்டம்

முகவரி : கூட்டுறவுச்சங்கங்களின் இணைப்பதிவாளர் அலுவலகம்
சி – 1 –3 பிளாக், முதல் தளம்,
மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகம்
குமாரசாமி ராஜாநகர்,
விருதுநகர்

இணையதள முகவரி : http://www.vnrdrb.net

விளம்பர எண். 01/2019 நாள் –09.08.2019

விருதுநகர் மாவட்டத்தில் கூட்டுறவுச்சங்கங்களின் பதிவாளர் கட்டுப்பாட்டில் செயல்படும் விருதுநகர் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியில் காலியாக உள்ள உதவியாளர் பணியிடங்களை நேரடி நியமனம் மூலம் நிரப்புவதற்காக இந்திய குடியுரிமையுடைய கீழ்க்காணும் தகுதிபெற்ற ஆண் /பெண் விண்ணப்பதாரர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் "http//www.vnrdrb.net" என்ற இணையதள முகவரியில் மட்டுமே (only through Online) 06.09.2019 பிற்பகல் 5.45 மணிவரை வரவேற்கப்படுகின்றன.

| வஎ | உதவியாளர் காலிப்பணியிடங்கள் எண்ணிக்கை | பணியிடத்திற்கான சம்பள விகிதம் (தற்போதுள்ளபடி) குறைந்தபட்சம்/ அதிகபட்சம் | காலிப்பணியிடத்திற்கான வகுப்புவாரி ஒதுக்கீடு | | |
|---|---|---|---|---|---|
| 1 | 55 | 14000–850/5–18250–950/2–20150–1000/7–27150–1225/2–29600–1450/4–35400–1500/7–45900–1600/1–47500/– | பொதுப்பிரிவு | : | 17 |
| | | | பிற்படுத்தப்பட்டோர் | : | 14 |
| | | | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர் | : | 11 |
| | | | பிற்படுத்தப்பட்டோர் (முஸ்லீம்) | : | 2 |
| | | | ஆதிதிராவிடர் | : | 8 |
| | | | ஆதிதிராவிடர் (அருந்ததியர்) | : | 2 |
| | | | பழங்குடியினர் | : | 1 |

அ) மேற்படி சம்பள விகிதம் மற்றும் இதர படிகள் மேற்குறிப்பிட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் பணியாளர் பணிநிலை குறித்த சிறப்புத் துணைவிதிகளுக்குட்பட்டு அமையும்.

ஆ) தேர்வு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் அவர்களுக்கு ஒதுக்கப்படும் சம்பந்தப்பட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் துணைவிதிகளுக்குட்பட்டு பணியாற்ற வேண்டும்.

இ) தேர்வில் கலந்துகொள்ளும்போது கடைப்பிடிக்கப்பட வேண்டிய விதிமுறைகள் குறித்த விவரங்கள் தேர்வு நுழைவுச்சீட்டில் தெரிவிக்கப்படும்.

ஈ). விருதுநகர் மண்டல இணைப்பதிவாளர் கடிதம் நக 5928/12 சப நாள் – 6.4.17ன்படி மாநில ஆள் சேர்ப்பு நிலையத்தால் தேர்வு செய்யப்பட்டவர்களில் 2 நபர்கள் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளதால் மேற்காணும் காலிப்பணியிடத்தில் சேர்க்கப்படவில்லை.

## 1). முக்கிய நாட்களும் நேரமும் :

| | | |
|---|---|---|
| 1). | பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் பதிவேற்றம் செய்யப்பட வேண்டிய கடைசி நாள் | 06.09.2019 பிற்பகல் 5.45 மணிவரை |
| 2). | எழுத்துத்தேர்வு நடைபெறும் நாள் | 20.10.2019 முற்பகல் 10.00 முதல் பிற்பகல் 1.00 மணிவரை |

## 2). தகுதிகள்

### அ) வயது

- விண்ணப்பதாரர் 18 வயது பூர்த்தி அடைந்தவராக இருக்க வேண்டும் (அதாவது 01.01.2001 அன்றோ அதற்கு முன்னரோ பிறந்தவராக இருக்க வேண்டும்
- விண்ணப்பதாரர்கள் 01.01.2019 அன்று கீழ்க்கண்ட வயதினை பூர்த்தி செய்தவராக இருக்கக் கூடாது.

| | | | |
|---|---|---|---|
| 1 | ஆதிதிராவிடர், அருந்ததியர், பழங்குடியினர், மிகவும் பிற்படுத் தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர், பிற்படுத்தப்பட்டவகுப்பினர், சார்ந்த முன்னாள் இராணுவத்தினர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் | : | வயது வரம்பு இல்லை |
| 2 | பிற வகுப்பினர் (OC) | : | 30 வயதுக்கு மிகாமல் |
| 3 | அனைத்து இனத்தைச் சார்ந்த ஆதரவற்ற விதவைகள் | : | வயது வரம்பு இல்லை |
| 4 | பிற வகுப்பினர் (OC) சார்ந்த முன்னாள் இராணுவத்தினர் | : | 48 வயதுக்கு மிகாமல் |
| 5 | பிற வகுப்பினர் (OC) சார்ந்த மாற்று திறனாளிகள் | : | 40 வயதுக்கு மிகாமல் |

**ஆ) கல்வித்தகுதி – ஏதேனும் ஒரு பட்டப்படிப்பு (Any Degree) ( 10 + 2 + 3 ) மற்றும் கூட்டுறவுப் பயிற்சி**

- பல்கலைக் கழகங்களால் வழங்கப்படும் பட்டப் படிப்பிற்கு பதிலாக பதினைந்து ஆண்டுகள் இராணுவத்தில் பணிபுரிந்தவர்களுக்கு இராணுவத்தால் வழங்கப்படும் பட்டப்படிப்புச் சான்றிதழ் பெற்றுள்ள முன்னாள் இராணுவத்தினர்களும் விண்ணப்பிக்கலாம். ஆனால் அவர்கள் பள்ளி இறுதித் தேர்விலும் (SSLC) மேல்நிலைக் கல்வியிலும் (HSC) தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

- கூட்டுறவு பயிற்சி பெற்றவர்கள் மட்டுமே மேற்படி உதவியாளர் நியமனத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும். கூட்டுறவு பயிற்சி குறித்த விரிவான விவரங்கள் அடங்கிய பதிவாளர் அவர்களின் சுற்றறிக்கை எண். 29 / 2013 நாள் – 18.7.2013 மாவட்ட ஆள்சேர்ப்பு நிலைய இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

- விண்ணப்பதாரர்கள் பள்ளி இறுதி வகுப்பு அல்லது மேல்நிலை படிப்பு அல்லது பட்டப் படிப்பின்போது தமிழ்மொழியை ஒரு பாடமாக படித்துத் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

- கணினி பயன்பாட்டில் அடிப்படை அறிவு பெற்றிருத்தல் வேண்டும்.

**இ) பொது**

- விண்ணப்பதாரர்கள் பிற மாநிலத்தவர்களாக இருக்கும் பட்சத்தில் அவர்கள் எந்தப் பிரிவைச் சார்ந்தவர்களாக இருப்பினும் பிற வகுப்பினராகவே (OC) கருதப்படுவர்.

- ”ஆதரவற்ற விதவை ” என்பது அனைத்து வழியிலிருந்தும் பெறும் மொத்த மாத வருமானம் ரூ 4000/–க்கும் (ரூபாய் நான்காயிரம் மட்டும்) குறைவாகப் பெறுகின்ற ஒரு விதவையைக் குறிப்பதாகும். இவ்வருமானம், குடும்ப ஓய்வூதியம் அல்லது தொழிற்கல்வி பெற்றவர்களின் சுயதொழில் மூலம் ஈட்டும் வருமானம் உள்ளிட்ட மற்ற வருமானங்கள் ஆகியவற்றையும் உள்ளடக்கியதாகும். இத்தகைய விண்ணப்பதாரர்கள் உரிய **வருவாய் கோட்ட அலுவலர் அல்லது உதவி ஆட்சியர் அல்லது சார் ஆட்சியரிடமிருந்து** நிர்ணயிக்கப்பட்ட படிவத்தில் சான்றிதழைப் பெற்று சமர்ப்பிக்க வேண்டும். விவாகரத்து பெற்றவர், கணவரால் கைவிடப்பட்டவர், ஆதரவற்ற விதவையாக கருதப்படமாட்டார். மறுமணம் புரிந்தவர் ஆதரவற்ற விதவையாகக் கருதப்படமாட்டார்

**3) விண்ணப்பக் கட்டணம்**

அ) **விண்ணப்பப் பதிவு மற்றும் எழுத்துத் தேர்வுக்கான கட்டணம் ரூ 250/– ஆகும்**

**ஆ) விண்ணப்பக்கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிப்பு**

- ஆதிதிராவிடர், பழங்குடியினர், அனைத்து பிரிவையும் சார்ந்த மாற்றுத் திறனாளிகள், அனைத்து பிரிவையும் சார்ந்த ஆதரவற்ற விதவைகள ஆகியோருக்கு இக்கட்டணம் செலுத்துவதிலிருந்துவிலக்களிக்கப்படுகிறது.

- விண்ணப்பக் கட்டணம் செலுத்த விலக்களிக்கப்பட்டுள்ள மாற்றுத்திறனாளிகள் **மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலரிடமிருந்து** சான்றிதழும் மருத்துவச் சான்றிதழும் பெற்றிருக்க வேண்டும். ஆதரவற்ற விதவைகள் **வருவாய் கோட்ட அலுவலர் அல்லது உதவி ஆட்சியர் அல்லது சார் ஆட்சியரிடமிருந்து** சான்று பெற்றிருக்க வேண்டும்.

**இ) விண்ணப்பக்கட்டணம் செலுத்தும் முறை**

- விண்ணப்பப்பிதற்கு முன் விண்ணப்பக்கட்டணத்தினை கீழ்க்காணும் இரண்டு முறைகளில் ஏதேனும் ஒரு முறை மூலம் கட்டணம் செலுத்த வேண்டும்

  1. மேற்படி கட்டணம், விருதுநகர் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் தலைமையகம் அல்லது கிளைகளில் நேரடியாக செலுத்தப்பட்டு, அவ்வாறு செலுத்தப்பட்ட விண்ணப்பக்கட்டண இரசீதில் (Candidate's copy of the chalan ) உள்ள Journal ID என்ற எண்ணை விண்ணப்பதாரர், தமது விண்ணப்பத்தில் அதற்கென்று ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் குறிப்பிட்டு விண்ணப்பக் கட்டணம் செலுத்திய இரசீதை (Candidate's copy of the pay -in - slip) Scan செய்து upload செய்ய வேண்டும்.

  2. தேர்வுக் கட்டணத்தை Online மூலம் State Bank of India இணையதளத்தில் உள்ள “SBI Collect “ என்ற சேவையைப் பயன்படுத்தியும் செலுத்தலாம். 'SBI Collect ' என்ற சேவையைப் பயன்படுத்தி விண்ணப்பக் கட்டணம் செலுத்துவதற்கான வசதி (Link to the 'SBI Collect ' service in the State Bank of India Online payment portal) விருதுநகர் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலைய இணையதளத்திலும் கொடுக்கப்பட்டிருக்கும். Online மூலம் மேற்குறிப்பிட்டவாறு விண்ணப்பக் கட்டணத்தைத் செலுத்தி முடித்த பின்னர் திரையில் தோன்றும் இரசீதினை பிரிண்ட் எடுத்துக்கொள்வதுடன் அங்கே திரையில் தோன்றும் DUA .. .. .. .. .. .. என்று தொடங்கும் எண்ணை (SBI Collect Reference Number)குறித்து வைத்துக் கொண்டு அந்த எண்ணை விண்ணப்பத்தில் அதற்கென்று ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் குறிப்பிட வேண்டும்.

## ஈ) விண்ணப்பக்கட்டணம் செலுத்துவதில் உள்ள நிபந்தனைகள்

- இணையவழி கட்டணம் செலுத்தும்போது ஏற்படும் இடர்பாடுகளுக்கும் தோல்விகளுக்கும் விருதுநகர் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையம் பொறுப்பாகாது

- மேற்கண்ட நடைமுறைகளைப் பின்பற்றி Online மூலம் பணம் செலுத்தும் விண்ணப்பதாரர்கள் DUA .. .. .. .. .. .. எண்ணை பிறரிடம் பகிரக்கூடாது. அதேபோல் மத்திய கூட்டுறவு வங்கியின் Jounal ID-ஐ பிறரிடம் பகிரக்கூடாது. ஒரே DUA எண் / Jounal ID எண் ஒன்றுக்கு மேற்பட்டவிண்ணப்பங்களிலிருந்தால் அந்த விண்ணப்பங்கள் அனைத்தும் நிராகரிக்கப்படும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை **"http//www.vnrdrb.net "** என்ற இணையதளம் மூலம் **06.09.2019** மாலை **5.45** மணி வரை பதிவேற்றம் செய்யலாம்.

- கட்டணம் செலுத்தும் முறையை எந்த நேரத்திலும் மாற்றியமைக்கும் உரிமை விருதுநகர் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்திற்கு உண்டு.

- ஒருமுறை செலுத்தப்பட்ட விண்ணப்பக் கட்டணம் எக்காரணத்தைக்கொண்டும் திருப்பித்தரப்படமாட்டாது.

## 4) விண்ணப்பிக்கும் முறை

- அறிவிக்கப்பட்டுள்ள காலிப்பணியிடங்களுக்கான விண்ணப்பப்படிவம் “http://www.vnrdrb.net ”என்ற இணையதளம் மூலம் மட்டுமே பதிவேற்றம் செய்யப்பட வேண்டும். விண்ணப்பதாரர்கள் இணையதளம் மூலம் பதிவேற்றம் செய்யும் முன் கீழ்க்கண்ட வற்றை உறுதி செய்துகொள்ள வேண்டும்.

- விண்ணப்பப் படிவங்கள் இணையதளம் மூலம் முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும்.

- விண்ணப்பப் படிவங்களுடன் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவைகளும் அவற்றிற்கென ஒதுக்கப்பட்ட இடங்களில் ஸ்கேன் செய்யப்பட்டு பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்.
    1. விண்ணப்பதாரரின் புகைப்படம் – **50** KB அளவிற்கு மிகாமல் ( jpeg or jpg format)
    2. விண்ணப்பதாரரின் கையெழுத்து – **50** KB அளவிற்கு மிகாமல் (jpeg or jpg format)
    3. விண்ணப்பதராரின் சாதிச் சான்றிதழ் – **200** KB அளவிற்கு மிகாமல் (pdf file)

4. மாற்றுத்திறனாளிச் சான்றிதழ் – 200 KB அளவிற்கு மிகாமல் (pdf file)
5. ஆதரவற்ற விதவைச் சான்றிதழ் – 200 KB அளவிற்கு மிகாமல் (pdf file)
6. கூட்டுறவு பட்டயப் பயிற்சி சான்றிதழ் – 200 KB அளவிற்கு மிகாமல் (pdf file)
7. பட்டப்படிப்பு சான்றிதழ் – 200 KB அளவிற்கு மிகாமல் (pdf file)
8. மத்திய கூட்டுறவு வங்கி மூலம் செலுத்தப்பட்ட விண்ணப்பக் கட்டண இரசீது (Candidate"s copy of the pay- in - slip ) – 100 KB அளவிற்கு மிகாமல் (jpeg or jpg format )

- மேற்குறிப்பிட்ட ஸ்கேன் செய்யப்பட்ட ஆவணங்கள் பதிவேற்றம் செய்யப்படாமல் பெறப்படும்விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

- விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்யும்போது விண்ணப்பதாரர் தவறான தகவல்களை அளித்தால் அவ்விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

## 5) எழுத்துத் தேர்வு

- மேற்கண்ட பதவிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் பரிசீரிக்கப்பட்டு தகுதி உள்ளவர்கள் மட்டுமே எழுத்துத் தேர்வுக்கு அழைக்கப்படுவார்கள். எழுத்துத் தேர்வில் கலந்துகொள்ளத் தகுதி பெற்ற நபர்களின் பட்டியல் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலைய இணையதளத்தில் ( "http//www.vnrdrb.net " ) வெளியிடப்படும்.

- எழுத்துத்தேர்வு மாவட்டத்தின் குறிப்பிட்ட இடங்களில் நடைபெறும். எழுத்துத் தேர்வு எந்த இடத்தில் நடைபெறும் என்பது எழுத்துத் தேர்வுக்கான நுழைவுச்சீட்டில் குறிப்பிடப்படும். எழுத்துத் தேர்வு நடைபெறுவது தொடர்பான விவரங்கள் மின்னஞ்சல் (e-mail) மூலம் தகுதி பெற்ற விண்ணப்பதாரர்களுக்கு அனுப்பி வைக்கப்படும். எழுத்துத் தேர்வுக்கான நுழைவுச் சீட்டினை தேர்வு நாளிலிருந்து ஒரு வார காலத்திற்கு முன் விருதுநகர் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலைய இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டும். நுழைவுச் சீட்டுடன் வராத விண்ணப்பதாரர்கள் எழுத்துத் தேர்வில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள்.

- எழுத்துத்தேர்வு பட்டப்படிப்பு நிலையிலான தரத்துடனும், பொது அறிவு, பொதுத்தமிழ், அடிப்படைக் கணக்கியல், கூட்டுறவுச் சட்டம் மற்றும் வங்கியியல் போன்ற பாடங்களை உள்ளடக்கிய தாகவும் இருக்கும். எழுத்துத் தேர்வு கொள்குறி வகையில் (Objective type) 200 வினாக்களுடன், 170 மதிப்பெண்களுக்கானதாகவும் தேர்வுக்கான கால அளவு 180 நிமிடங்கள் கொண்டதாகவும் இருக்கும். வினாத்தாள் ஆங்கிலம் மற்றும் தமிழில் அச்சடிக்கப்பட்டிருக்கும்.

- மேற்கண்ட எழுத்துத் தேர்வுக்குரிய பாடத்திட்டங்கள் (Syllabus) விருதுநகர் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலைய இணைய தளத்தில் வெளியிடப்படும்.

- எழுத்துத் தேர்வு முடிவு பெற்ற பின் எழுத்துத்தேர்வுக்கான வினாவிடைகள் (Key answers) விருதுநகர் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலைய இணையதளத்தில் வெளியிடப்படும். வெளியிடப்பட்ட வினா விடைகள் (Key answers) தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை இருந்தால் வெளியிடப்பட்ட தேதியிலிருந்து மூன்று தினங்களுக்குள் விருதுநகர் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்திற்கு எழுத்து பூர்வமாக அல்லது இமெயில் மூலமாகத் தெரிவிக்க வேணடும். விருதுநகர் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையக் கூட்டத்தில் அது பரிசீலிக்கப்பட்டு உரிய முடிவுகள் எடுக்கப்படும்.

**6) நேர்முகத்தேர்வு**

- எழுத்துத் தேர்வில் வெற்றி பெற்ற விண்ணப்பதாரர்கள் விருதுநகர் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்தால் நடத்தப்படும் நேர்முகத் தேர்வில் கட்டாயம் கலந்துகொள்ள வேண்டும். விண்ணப்பதாரர்கள் எழுத்துத் தேர்வில் பெற்ற மதிபெண்கள் அடிப்படையிலும், இட ஒதுக்கீடு மற்றும் இனச்சுழற்சி அடிப்படையிலும் நேர்முகத் தேர்விற்கு அழைக்கபப்டுவார்கள்.

- நேர்முகத் தேர்வில் கலந்துகொள்ளத் தகுதி பெற்ற நபர்களின் பெயர்ப் பட்டியல் விருதுநகர் மாவட்ட ஆள் சேர்ப்பு நிலையத்தின் இணையதளம் வழியாக வெளியிடப்படும்.

- நேர்முகத் தேர்வு நடைபெறுவது தொடர்பான விவரங்கள் மின்னஞ்சல் மூலம் தகுதிபெற்ற விண்ணப்பதாரர்களுககு அனுப்பி வைக்கப்படும். நேர்முகத்தேர்வு நடைபெறும் இடம், நாள், நேரம் ஆகிய விவரங்கள் அடங்கிய நேர்முகத் தேர்விற்கான அழைப்புக் கடிதங்களை, தகுதி பெற்ற விண்ணப்பதாரர்கள் இணையதளம் மூலம் பதிவிறக்கம் செய்துகொள்ள வேண்டும். அழைப்புக் கடிதத்துடன் வராத விண்ணப்பதாரர்கள் நேர்முகத்தேர்வில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள்.

- நேர்முகத் தேர்வில் கலந்துகொள்ளவரும் விண்ணப்பதாரர்களிடம், அவர்கள் எந்த வகைச் சங்கத்திற்கு எந்த வரிசையில் ஒதுக்கீடு செய்யப்பட விரும்புகிறார்கள் என்ற முன்னுரிமை விருப்பம் (option) பெறப்படும். நேர்முகத் தேர்வு முடிவடைந்த பின்னர், தகுதி பெற்ற விண்ணப்பதாரர்களை கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஒதுக்கீடு செய்யும்போது விண்ணப்பதாரர்கள்தெரிவித்த முன்னுரிமை கவனத்தில் கொள்ளப்படும்.

- எழுத்துத் தேர்வுக்கான மதிப்பெண் மற்றும் நேர்முக தேர்வுக்கான மதிப்பெண் முறையே 85 : 15 என்ற விகிதத்தில் இருஃக்கும்.

**7) தெரிவு செய்யப்படும் முறை**

- விண்ணப்பதாரர்கள் எழுத்துத் தேர்விலும் நேர்முகத் தேர்விலும் பெற்ற ஒட்டுமொத்த மதிப்பெண்கள் அடிப்படையில் தரவரிசைப் பட்டியல்

தயாரிக்கப்பட்டு அரசாணைப்படியான இட ஒதுக்கீடு இனச் சுழற்சி முறை பின்பற்றப்பட்டு பணியிடத்திற்கு தெரிவு செய்யப்படுவார்கள்.

- ஆதிதிராவிடர், அருந்ததியர், பழங்குடியினர், மிகவும் பிறப்டுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (முஸ்லீம்) ஆதரவற்ற விதவைகள், மாற்றுத் திறனாளிகள் மற்றும் ராணுவத்தினர் ஆகியோருக்கு ஒதுக்கப்பட்ட இடங்கள், விண்ணப்பதாரர்கள்தங்கள் விண்ணப்பங்களில் கொடுக்கும் வயது, கல்வித்தகுதி கூட்டுறவுப் பயிற்சித் தகுதி, சமூகப் பிரிவு, சிறப்புத் தகுதிகள் மற்றும் பிற தகுதிகள் அனைத்தையும் சரிபார்த்த பின்னர், அவற்றைப் பெறத் தகுதி உடைய விண்ணப்பதாரர்களுக்கு வழங்கப்படும்.

- விருதுநகர் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்தால் தேர்வு செய்யப்படும் நபர்களுக்குத் தெரிவு மற்றும் சங்கத்திற்கு ஒதுக்கீடு ஆணை ( Section and allotment order) விருதுநகர் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்தால் வழங்கப்படும். அவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட கூட்டுறவு நிறுவனத்தின் தகுதி வாய்ந்த அலுவலரால் பணியமர்வு ஆணை( Appointment order) வழங்கப்படும்.

- முன்னாள் இராணுவத்தின் வாரிசுதாரர்களுக்கு முன்னாள் இராணுவத்தினருக்கான இட ஒதுக்கீடு முறை பொருந்தாது.

- தெரிவு செய்யப்படும் மாற்றுத் திறனாளிகள், தங்களது குறைபாடு, தாங்கள் தெரிவு செய்யப்படும் பதவிகளுக்குரிய பொறுப்புகளை முழுத்திறனுடன் நிறைவேற்றுவதற்குத் தடையாக இருக்காது என்பதற்கான சான்றிதழை மருத்துவக் குழுவிடம் பெற்று சமர்ப்பிக்க வேண்டும்.

**8) இதர நிபந்தனைகள்**

- நேர்முகத் தேர்வில் கலந்துகொண்டு நிர்ணயிக்கப்பட்ட அனைத்து தகுதிகளையும் பூர்த்தி செய்துள்ளார் என விருதுநகர் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்தால் தெரிவு செய்யப்பட்ட ஒரு விண்ணப்பதாரர் அப்பணிக்கென நிர்ணயிக்கப்பட்ட தகுதிகள் அனைத்தையும் முழுமையாகப் பெற்றிருக்கவில்லையென பின்னர் கண்டுநிடிக்கப்பட்டால் அவரது தேர்வு விருதுநகர் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்தால் ரத்து செய்யப்படும்.

- நேர்முகத்தேர்வில் கலந்துகொள்ளும் விண்ணப்பதாரர்களுக்கு அவ்வாறு நேர்முகத் தேர்வில் கலந்துகொள்ள அழைப்புக் கடிதம் அனுப்பப்பட்டதை மட்டுமே காரணமாக வைத்து பணி நியமனம் கோர உரிமை கிடையாது.
- மேற்படி பணியிடங்களுக்கான தேர்வு குறித்து ஏதேனும் முறையீடு செய்வதாயின் இறுதித் தேர்வு முடிவு வெளியிடப்பட்ட 90 நாட்களுக்குள் விருதுநகர் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத் தலைவரிடம் உரிய காரணங்களுடன் மேல்முறையீடு செய்ய வேண்டும். அதற்குப் பின் பெறப்படும் முறையீடுகள் ஏற்கப்படமாட்டாது.

- மேலே குறிப்பிடப்பட்டுள்ள காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை கடைசி நேர மாறுதலுக்குட்பட்டது.

- காரணம் எதுவும் தெரிவிக்காமல் இந்த அறிவிக்கையை இரத்து செய்வதற்கு / திரும்பப் பெறுவதற்கு / திருத்துவதற்கு / கெடு தேதியை நீட்டிப்பதற்கு விருதுநகர் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்திற்கு உரிமையுண்டு.

- விண்ணப்பதாரர்கள் அவர்களது சொந்த நலன் கருதி அவர்களது விண்ணப்பத்தைச் சமர்ப்பிப்பதற்கு முன்பாக விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரைகளை கவனமாகப் படித்து தேர்வு செய்யப்படுவதற்குரிய நிபந்தனைகளைப் புரிந்துகொள்ள வேண்டும்.

- விண்ணப்பதாரர்கள் தேர்வுக்கு விண்ணப்பிப்பதற்காக கொடுக்கப்பட்டுள்ள கடைசி நாள் வரை காத்திருக்காமல் அதற்கு முன்னரே போதிய கால அவகாசத்தில் விண்ணப்பிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். ஏனெனில் கடைசி நாளில் அதிகபடியான விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்க நேரும்போது, விண்ணப்பம் சமர்ப்பிப்பதில் தாமதமோ அல்லது தொழில்நுட்பச் சிக்கல்களோ எழ வாய்ப்புள்ளது.மேற்கூறிய தொழில்நுட்பக் காரணங்களால் அல்லது வேறு காரணங்களால், விண்ணப்பதாரர்கள் தங்களது விண்ணப்பங்களைக் கடைசிக் கட்ட நாட்களில் சமர்ப்பிக்க இயலாது போனால் அதற்கு விருதுநகர் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையம் பொறுப்பாகாது.

- விண்ணப்பத்தினைச் சமர்ப்பிப்பதற்கான கடைசி நாள் மற்றும் நேரத்திற்குப் பிறகு ஆன்லைன் மூலம் விண்ணப்பம் செய்வதற்கான வசதி உடனடியாக நிறுத்தப்படும்.

- விண்ணப்பக் கட்டணம் செலுத்தியது தொடர்பான பிரச்சனை குறித்து ஏதேனும் முறையீடு செய்வதாயின் அப்பிரச்சனை ஏற்பட்ட **3** நாட்களுக்குள் விருதுநகர் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்திடம் உரிய காரணங்களுடன் முறையீடு செய்ய வேண்டும். அதற்குப் பின் பெறப்படும் முறையீடுகள் ஏற்கப்படமாட்டாது.

- கூடுதல் விவரங்கள் அல்லது சந்தேகங்களுக்கு **04562 252680** ல் உள்ள உதவி மையத்தையோ அல்லது vnrdrb2019@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரியையோ தொடர்பு கொள்ளலாம்

இணைப்பதிவாளர் /தலைவர்
கூட்டுறவுச் சங்கங்களுக்கான
விருதுநகர் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையம்